தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 5

2010 மார்ச் 19, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் நடைபெறும் முதல் கூட்டத்திற்கு உறுப்பினர்களை வரவேற்று, வளாகம் உருவாக்கப்பட்டதற்குப் பேரவைத் தலைவர் நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக சட்டப் பேரவை வரலாற்றில் இந்நாள் ஒரு பொன்னாள். இப்புதிய சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன். கலை நுணுக்கத்தோடு அனைவராலும் பாராட்டப்படக்கூடிய வகையில் இப்புதிய சட்டப் பேரவை வளாகத்தை உருவாக்கிக் கொடுத்துள்ள நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பேரவையின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நமது துணை முதல்வர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர், பொதுப் பணித் துறைச் செயலாளர் மற்றும் இப்பேரவை வளாகத்தை உருவாக்க உழைத்த

அதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. வரவு-செலவுத் திட்டம், 2010-2011, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) 2006 ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையிலே அமைதியாக உட்காருவதாக இருந்தால் உட்காருங்கள்; இல்லையென்றால் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)*

[அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் (திரு. ல. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. க. இராஜேந்திரன் தவிர) கோஷமிட்டுக்கொண்டு அவையிலிருந்து வெளியேறினர்.]

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2006 ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, மகத்தான மக்கள் நலத் திட்டங்கள் பல தீட்டி, அவற்றைச் செவ்வனே செயல்படுத்தி—கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு நிகழ்த்தியுள்ள ஒப்பற்ற சாதனைகளுக்கு எல்லாம் மணிமகுடம் வைத்தாற்போன்று அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய, இந்தப் புதிய சட்டப் பேரவையில், வரும் 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை உங்கள் முன் வைப்பதில் நான் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-35

இந்தியத் திருநாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத வகையிலும், அனைத்து வசதிகளும் ஒருங்கே அமையப் பெற்றதாகவும்,